# SENGUNTHAR

# Daily News

24-09-2026/SEC/DN/483



## “செம்மொழி” தலைப்பில் பௌர்ணமி கவியரங்கம்– நுவலி தமிழ் மன்றம் சார்பில் சிறப்பாக நடைபெற்றது.

செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் நு வலி தமிழ் மன்றம் சார்பில் “செம்மொழி” என்ற தலைப்பில் பௌர்ணமி கவியரங்கம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் மன்ற மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, முதலாம் ஆண்டு மாணவர்கள் “செம்மொழி” என்ற தலைப்பில் தாங்கள் இயற்றிய கவிதைகளை அரங்கேற்றம் செய்து, தமிழ்மொழியின் மீதான தங்களது ஆர்வத்தையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தினர். மாணவர்களின் கவிதைகள் விழாவிற்கு மேலும் சிறப்பையும் உயிரோட்டத்தையும் அளித்தன.

இந்நிகழ்வின் மூலம் மாணவர்களிடையே தாய்மொழிப் பற்றும், தமிழ்மொழியின் தொன்மை மற்றும் சிறப்பைப் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. மேலும், உலகின் தொன்மையான செம்மொழிகளில் ஒன்றான தமிழின் பழமை, செழுமை, வளமை, இலக்கியப் பெருமை மற்றும் தொடர்ச்சியான மொழி வளர்ச்சி குறித்து மாணவர்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

தமிழ்மொழி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலக்கியம், இலக்கணம், கலை, பண்பாடு, அறிவியல் சிந்தனை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதை மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் நிகழ்வின் கருத்துரைகள் அமைந்திருந்தன.

இத்தகைய நிகழ்வுகள் மாணவர்களின் மொழித்திறன், படைப்பாற்றல், பேச்சாற்றல் மற்றும் பண்பாட்டு உணர்வை வளர்ப்பதுடன், தமிழ்மொழியின் பெருமையை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் முக்கியமான பணியையும் மேற்கொள்கின்றன. மாணவர்களின் உற்சாகமான பங்கேற்புடன் நடைபெற்ற இப்பௌர்ணமி கவரங்கம் சிறப்பாக நிறைவுற்றது.

## STUDENTS CORNER

**SENGUNTHAR ENGINEERING COLLEGE**
(AUTONOMOUS)
NAAC Accredited with 'A' Grade,
(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
Recognized Under Section 2(f) & 12(B) of the UGC Act, 1956
TIRUCHENGODE- 637 205

Estd.2001

### CIRCULAR

24.09.2026

Ref .: 055 / SEC / Attendance / 2026

The Management and the Principal appreciate our Students for their **100% (Cent per Cent) Attendance Today (24.09.2026)**.

| Sl.No | Department | Strength | Year |
|---|---|---|---|
| 1 | ECE | 57 / 57 | I |
| 2 | R&A | 23 / 23 | |
| 3 | Pharm.Tech. | 15 / 15 | III |

24/09/26

PRINCIPAL

Copy Submitted to the Correspondent, SEC

Copy to:
1. Executive Director
2. All Deans
3. All HODs for staff & Students circulation
4. E-Circular I / C
5. IQAC
6. Office

## நுவலிதமிழ்மன்றம் - தினம்ஒருதிருக்குறள்



குறள் 844

வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை உடையம்யாம் என்னும் செருக்கு.

விளக்கம்:

அறிவின்மை என்று சொல்லப்படுவது என்ன என்று கேட்டால், அது தம்மைத் தாமே நல அறிவு உடையவரென்று என்னும் மயக்கமே ஆகும்.

## இலக்கணக்குறிப்பறிதல்

வானுடனும், கடவுளுடனும்-எண்ணும்மை

எண்ணும்மை:

கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் ‘உம்’ எனும் விகுதி வெளிப்படையாக வருமாயின் அது எண்ணும்மை எனப்படும்.

(எ.கா)

*அல்லும் பகலும் *காதலும் கற்பும் *அவனும் இவனும் சிறப்பு எண்ணும்மை

சொற்கள் “உடனும்” என முடியும்.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச்சொற்கள்

பிறமொழி - அர்ப்பணம் தமிழ் மொழி - படையல்